Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஜுலை 23, 2023

## நெஸ்லே நிறுவனம் இலங்கையின் மிகவும் பெறுமதியான உணவு மற்றும் பான வகை வர்த்தகநாமம் என்ற பாராட்டு அங்கீகாரத்தை மீண்டும் சம்பாதித்துள்ளது

*2023 இல் முதல் பத்து மதிப்புமிக்க நுகர்வோர் வர்த்தகநாமங்களில் இடம்பிடித்துள்ளது*

புகழ்பெற்ற வர்த்தகநாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brands Finance, LMD சஞ்சிகையுடன் இணைந்து, தொடர்ச்சியாக 20 ஆவது ஆண்டாக வருடாந்த நுகர்வோர் வர்த்தகநாமங்களின் (Consumer Brands) தரவரிசையை வெளியிட்டுள்ளது. இதில், நெஸ்லே நிறுவனம் இலங்கையின் மிகவும் பெறுமதியான உணவு மற்றும் பான வகை வர்த்தகநாமம் என்ற பட்டத்தை தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகப் பெற்றுள்ளது. தரவரிசையில் முன்னேற்றங்கண்டு, 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனம், முதல் பத்து ஸ்தானங்களில் உள்ள ஒரேயொரு உணவு மற்றும் பான வகை வர்த்தகநாமமாக, ஒட்டுமொத்தமாக 8 வது ஸ்தானத்தைப் பிடித்துள்ளது. இந்த மதிப்புமிக்க தரவரிசை, உள்நாட்டு வணிக சமூகத்தின் மத்தியில் மிகவும் மதிக்கப்படுவதுடன், வர்த்தகநாமங்களின் மதிப்பு மற்றும் வலிமையை இது மதிப்பிடுகிறது

இந்த அங்கீகாரத்திற்கு மேலதிகமாக, நெஸ்லே நிறுவனத்தின் நான்கு வர்த்தகநாமங்கள், இந்த ஆண்டின் இலங்கையில் மிகவும் நேசிக்கப்படும் வர்த்தகநாமங்களில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டைப் போலவே, நிறுவனத்தின் முதன்மை வர்த்தகநாமமான நெஸ்டமோல்ற்று ஆனது பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்கள் - மோல்ற்று பானங்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ள அதே நேரத்தில், புகழ்பூத்த வர்த்தநாமமான மைலோ அதே பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. மெகி மற்றும் மில்க்மெய்ட் ஆகிய அபிமானம்பெற்ற வீட்டுத் தெரிவுகள், முறையே சேர்க்கைப் பொருட்கள் மற்றும் ஜாம் மற்றும் சோஸ் தயாரிப்பு பிரிவுகளில் இரண்டாவது இடத்தைப் பிடித்தன.

"தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இலங்கையின் மிகவும் பெறுமதியான உணவு மற்றும் பான வகை வர்த்தகநாமமாக பெயரிடப்பட்டதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். இந்த அங்கீகாரம் உயர்தர தயாரிப்புகள் மற்றும் தலைசிறந்த நுகர்வோர் அனுபவங்களை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிப்பது மட்டுமன்றி, எமது நுகர்வோர் மற்றும் தொடர்புபட்ட அனைத்து தரப்பினரதும் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தையும் அங்கீகரிக்கிறது. நாட்டில் மிகவும் நேசிக்கப்படும் வர்த்தகநாமங்களில் எமது நான்கு வர்த்தகநாமங்கள் பெயரிடப்பட்டுள்ளதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எமது வர்த்தகநாமங்கள் ஒவ்வொன்றையும் கட்டியெழுப்ப பாரிய உழைப்பு, பேரார்வம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியனவே பின்புலமாகக் காணப்படுகின்றன. எனவே, பல ஆண்டுகளாக எமது வர்த்தகநாமங்கள் எமது நுகர்வோருடன் வலுவான பிணைப்பைக் கட்டியெழுப்பியுள்ளன என்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இது போன்ற அங்கீகாரங்கள் தலைசிறந்து விளங்குவதற்கு நம்மைத் தூண்டுகின்றன. மிக உயர்ந்த தரம் வாய்ந்த தயாரிப்புகளை வழங்குவதற்கும், புத்தாக்கங்களை உள்வாங்குவதற்கும், நுகர்வோர், சமூகங்கள் மற்றும் பூமியின் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளோம்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு பேர்ன்ஹார்ட் ஸ்டீபன் அவர்கள் தெரிவித்தார்.

'தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்' என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்துவருகிறது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |